<u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>முன்னிலை</u> : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 08 ஆம் நாள் புதன் கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 251/ 2014</u>

<u>C.N.R.No.TNTS02-000816-2014</u>

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
சேர்ந்தமரம் காவல் நிலையம்,
கு.எண் : 143 / 2013 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

1) வேலு, 45/13
த.பெ. திருமலை,
அம்மன்கோவில் தெரு,
வல்லராமபுரம்.
2) திருமலைச்சாமி (எ) சீமான்,
த.பெ. வேலு,
அம்மன்கோவில் தெரு,
வல்லராமபுரம்.
3) பொட்டு, வயது 40/13
க.பெ. வேலு,
அம்மன்கோவில் தெரு,
வல்லராமபுரம்.

. . . எதிரிகள்

இந்த வழக்கானது 19.09.2014 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.251/2014 ஆக கோப்பிற்கு

எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 16.03.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 04.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. மாரிகுட்டி அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (08.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>

ஏற்கனவே இருந்த முன் விரோதம் காரணமா கடந்த 18.03.2013 ம் தேதி காலை 11.00 மணிக்கு வல்லராமபுரம் புகார்தாரர் பொன்னுத்தாய் உள்ள இடத்தில் இருந்த வேப்பமரத்தில் புகார்தாரர் குலை ஒடித்துக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த எதிரிகள் புகார்தாரரை பார்த்து "ஏ தேவடியா புண்ட மவளே ஏன் இந்த மரத்தில் குழை ஒடித்தாய்" என அவதூறாக பேசியதாகவும், 1ம் எதிரி கீழே கிடந்த கம்பை எடுத்து புகார்தாரரின் தலையில் அடித்து சாதாரண காயம் உண்டு பண்ணியதாகவும், எதிரிகள் 2, 3 ம் சேர்ந்து புகார்தாரரை பெண் என்றும் பாராமல் கீழே மிதித்து தள்ளியும் பின்பு மூன்று எதிரிகளும் சேர்ந்து "இன்று தப்பித்து விட்டாய் உன்னை வெட்டி இந்த மரத்தில் கட்டி தொங்கவிடுகிறேன் பார்" என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே 1, 2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 – ன் படியும் 3ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) – ன் படியும் குற்றங்கள் புரிந்துள்ளதாக சேர்ந்தமரம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்கள் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 – ன் படியும், 3ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) – ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தனர். எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அசா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>

கடந்த 18.03.2013 ம் தேதி காலை 11.00 மணிக்கு அசா–1 பொன்னுத்தாய் என்பவர் வேப்பமரத்தில் குழை ஒடிக்கும் போது அங்கு வந்த 2ம் எதிரி எப்படி நீ குழை ஒடிப்பாய் என்று சொல்லி அசா–1 டம் இருந்த கம்பை பிடுக்கிகொண்ட அசா–1 ஐ மிதித்து தள்ளியுள்ளார். கீழே கிடந்த கம்பை எடுத்து 3ம் எதிரி அசா–1 ன் தலையில் அடித்ததில் அசா–1 க்கு ரத்தம் வந்து 8 தையல் போடப்பட்டுள்ளது. 1ம் எதிரி அசா–1 ஐ பார்த்து கெட்ட வார்த்தைகளால் பேசியுள்ளார். அசா–1 "உங்களுக்கு இருக்கும் பங்கு எனக்கு இல்லையா" என்று கேட்டுள்ளார்.

அதற்கு எதிரிகள் அசா–1 ஐ பார்த்து "தேவிடியா பலவற்றை" என்று அசிங்கமாக பேசியுள்ளார். அப்போது அங்கு வந்த அசா–1 ன் மகள் சின்னத்தாயும், பால்ராஜ் ஆகியோர்கள் சத்தம் போட்டுள்ளார்கள். அசா–1 ரத்தத்துடன் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் புகார் மனு அசாஆ–5 கொடுத்துள்ளார்.

6. அசா–6 மருத்துவர் சுதா என்பவர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது 18.03.2013 அன்று நண்பகல் 4.00 மணியளவில் அசா–1 பொன்னுத்தாய் என்பவர் சிகிச்சைக்கு வந்துள்ளார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு சிதைவு காயம் 2x1x1 செமீ அளவில் தலையின் தோல் பகுதியில் காணப்பட்டுள்ளது. அவரை பரிசோதித்ததில் அவரது நாடி துடிப்பு இரத்த அழுத்தம் சாதாரணமாக இருந்துள்ளது. அசா–1 க்கு சிகிச்சை அளித்து உள்நோளியாக பெண்கள் மருத்துவ பகுதியில் அனுமதித்துள்ளார். அசா–1 க்கு சாதாரண காயம் என காயச்சான்று அசாஆ–3 வழங்கியுள்ளார்.

7. அசா–7 தலைமை காவலர் சுரேஷ்குமார் என்பவர் கடந்த 27.05.2013 ம் தேதி சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த போது அசா–1 பொன்னுதாய் என்பவர் கொடுத்த புகார் மனு அசாஆ–5 ஐ பெற்று அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அசாஆ–4 பதிவு செய்துள்ளார்.

8. அசா–8 காவல் ஆய்வாளர் முத்துராஜ் என்பவர் கடந்த 27.05.2013 ம் தேதி காவலர் சுரேஷ்குமார் நிலைய பொறுப்பில் இருந்த போது அசா–1 பொன்னுத்தாய் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு அசாஆ–5 ஐ பெற்று அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அசாஆ–4 பதிவு செய்துள்ளார். மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் அதே தேதி 14.00 மணியளவில் வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகர்சாமி மற்றும் அசா–3 கேசு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ–6 மற்றும் மாதிரி

வரைபடம் அசாஆ–7 தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் காயம்பட்ட பொன்னுத்தாய் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–6 சுதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று அசாஆ–3 பெற்றுள்ளார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

9. எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் படி எதிரிகளுக்கு பாதகமாக உள்ள, சாட்சிகளின் சாட்சியங்களை எடுத்துக் கூறி வினவிய போது எதிரிகள் 'பொய் சாட்சி' என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் 'இல்லை' என்றும் கூறியுள்ளார்.

10. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 – ன் படியான குற்றசாட்டுகளும் 3ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) – ன் படியான குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

11. **<u>தீர்வு:–</u>**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிகள் புகார்தாரரை பார்த்து "ஏ தேவடியா புண்ட மவளே ஏன் இந்த மரத்தில் குழை ஒடித்தாய்" என அவதுாறாக பேசியதாகவும், 1ம் எதிரி கீழே கிடந்த கம்பை எடுத்து புகார்தாரரின் தலையில் அடித்து சாதாரண காயம் உண்டு பண்ணியதாகவும், எதிரிகள் 2, 3 ம் சேர்ந்து புகார்தாரரை பெண் என்றும் பாராமல் கீழே மிதித்து தள்ளியும் பின்பு மூன்று எதிரிகளும் சேர்ந்து "இன்று தப்பித்து விட்டாய் உன்னை வெட்டி இந்த மரத்தில் கட்டி தொங்கவிடுகிறேன் பார்" என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், உள்ள இந்த வழக்கானது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு

அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

12. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை எனவும், எதிரிகள் இந்த வழக்கில் ஈடுபட்டதாக அரசுத்தரப்பில் தனிநபர் சாட்சியங்கள் எதுவுமில்லை எனவும், அரசுதரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

13. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரிகள் புகார்தாரரை பார்த்து "ஏ தேவடியா புண்ட மவளே ஏன் இந்த மரத்தில் குழை ஒடித்தாய்" என அவதூறாக பேசியதாகவும், 1ம் எதிரி கீழே கிடந்த கம்பை எடுத்து புகார்தாரரின் தலையில் அடித்து சாதாரண காயம் உண்டு பண்ணியதாகவும், எதிரிகள் 2, 3 ம் சேர்ந்து புகார்தாரரை பெண் என்றும் பாராமல் கீழே மிதித்து தள்ளியும் பின்பு மூன்று எதிரிகளும் சேர்ந்து "இன்று தப்பித்து விட்டாய் உன்னை வெட்டி இந்த மரத்தில் கட்டி தொங்கவிடுகிறேன் பார்" என கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்பட்டு 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4 –ன் படியும் 3 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) – ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

13. அசா–1 பொன்னுத்தாய் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 18.03.2013 ம் தேதி காலை 11.00 மணிக்கு வேப்பமரத்தில் தான் குழை ஒடிக்கும்போது திருமலைச்சாமி என்ற சீமான் எப்படி நீ குழை ஒடிப்பாய் என்று சொல்லி தன்னிடம் இருந்த கம்பை பிடிங்கி கொண்டு தன்னை மிதித்து தள்ளி அடித்தார் எனவும் எதிரி கீழே கிடந்த கம்பை எடுத்து தன்னுடைய தலையில் அடித்தார் எனவும் தனக்கு ரத்தம் வந்தது எனவும் எதிரிகள் "தேவிடியா பலவற்றை" என்று அசிங்கமாக பேசியதாகவும் கூறியுள்ளார். அசா–1 ன் மகள் அசா–2 சின்னத்தாய்

என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் எதிரி சீமான் கம்பை வைத்து தனது அம்மாவின் தலையில் அடித்து காயப்படுத்தினார் எனவும் எதிரி பொட்டு கம்பால் தன் அம்மாவை அடித்து காயப்படுத்தினார் எனவும் கூறியுள்ளார். அசா–1 ன் கணவரான அசா–4 மாரியப்பன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் எதிரிகள் தன்னுடைய மனைவியை பார்த்து "தேவிடியா முண்டை பலவற்றை" என்று தவறான வார்த்தைகள் பேசியதாகவும் எதிரிகள் மூன்று பேரும் வேப்பங்கொப்பை எடுத்து தன்னுடைய மனைவியை தலையில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் மூன்றுபேரும் "இன்று தப்பித்து விட்டாய் என்று இருந்தாலும் வெட்டி கொல்லாமல் விடமாட்டேன்" என்று மிரட்டல் விடுத்து சென்றதாகவும் கூறியுள்ளார்.

14. அசாஆ–1 புகார் மனுவில் 1ம் எதிரி வேலு அசா–1 ன் தலையில் அடித்து சாதாரண காயம் உண்டுபண்ணியதாகவும் 2, 3 எதிரிகள் அசா–1 ஐ கீழே மிதித்து தள்ளி சிறு காயம் ஏற்படுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அசா–1, அசா–2, அசா–4 ஆகியோர்கள் எதிரி வேலு அசா–1 ன் தலையில் கம்பால் அடித்து காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் அளிக்கவில்லை. அசா–1 க்கு தலையில் 2 x 1 x 1 செமீ அளவில் சிதைந்த காயம் இருந்ததாக மருத்துவர் அசா–6 சுதா என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அசா–1 க்கு தலையில் ஏற்பட்ட காயம் எந்த எதிரியால் ஏற்பட்டது என்று அரசுத்தரப்பு வழக்கிற்கும் அசா–1, அசா–2, அசா–4 ஆகியோர்களின் சாட்சியங்களுக்கும் மிக்க முரண்பாடுகள் உள்ளது. சம்பவம் பொது இடத்தில் வைத்து நடந்ததாக அசா–1, அசா–2, அசா–4 ஆகியோர்கள் சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி அசிங்கமான வார்த்தைகள் பேசியதால் அசா–1 க்கோ இதர நபர்களுக்கோ அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக அசா–1 சாட்சியம் அளிக்கவில்லை. எதிரிகள் மிரட்டியதாக அசா–1, அசா–2 ஆகியோர்கள் சாட்சியம் அளிக்கவில்லை. இந்நிலையில் அரசுத்தரப்பில் கூறியவாறு இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதா என இந்நீதிமன்றத்திற்க சந்தேகம் எழுகிறது.

15. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. முடிவாக, 1,2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் படியான குற்றச்சாட்டுகளும் 3ம் எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) – ன் படியான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்ப்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து, 1, 2 எதிரிகளை இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) – ன் படியான குற்றங்களிலிருந்தும் 3 ம் எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) – ன் படியான குற்றங்களிலிருந்தும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 248(1)– ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 08 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA — Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.07.09 12:46:22 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திருமதி. பொன்னுத்தாய் | புகார்தாரர் |
| 2 | திருமதி. சின்னதாய் | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. கேசு | பார்வை மகஜர் மற்றும் வரைபடம் சாட்சி |
| 4 | திரு. மாரியப்பன் | புகார் மனுவில் அறிவேன் சாட்சி |
| 5 | திரு. பால்ராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| 6 | மருத்துவர் சுதா | காயச்சான்று வழங்கிய சாட்சி |
| 7 | திரு. சுரேஷ்குமார் (தலைமை காவலர்) | வழக்கு பதிவு செய்த சாட்சி |
| 8 | திரு. முத்துராஜ் (காவல் ஆய்வாளர்) | புலன் விசாரணை அதிகாரி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | பார்வை மகஜரில் அசா–3 ன் 2வது கையெழுத்து | அ.சா.3 |
| 2. | புகார் மனுவில் அறிவேன் சாட்சி அசா–4ன் கையெழுத்து | அ.சா.4 |
| 3. | காயச்சான்று | அ.சா.6 |
| 4. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| 5. | புகார் மனு | அ.சா.8 |
| 6 | பார்வை மகஜர் | அ.சா.8 |
| 7 | மாதிரி வரைபடம் | அ.சா.8 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை.

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : – இல்லை
<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள்</u>: – இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.07.09 12:46:28 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.